`DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 11-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 11 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | மணி | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | குப்புசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | ஜமீன் ஊத்துக்குளி | வயது | - | 49/2025 |
| சாதி | - | | | | |

**<u>06-08-2025</u>**

## ( 1, 2 எதிரிகள் ஆஜர்)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து செண்ரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முத்துராஜ் என்பவரை தெரியாது. ஆஜர் 1-ம் எதிரி அய்யப்பன் என்பவர் என்னை கட்டிட வேலைக்கு அழைத்து சென்றார். ஆஜர் 2-ம் எதிரியை தெரியாது. கடந்த 30-11-2022-ம் தேதி என்னை 1-ம் எதிரி வேலைக்கு கூட்டிவந்தார். வால்பாறையில் பிரவின் காட்டேஜ்சில் நான், கிரி, சக்திவேல் மற்றும் எதிரி அய்யப்பன் ஆகிய 4 பேரும் வேலை செய்துகொண்டிருந்தோம். பகல் 12.00 மணியளவில் மணிகண்டன் என்பவரும் மைதீன் என்பவரும் அய்யப்பனை பார்க்கவந்தார்கள். கட்டிடத்தின் மேற்கு பகுதியில் நாங்கள் 4 பேரும் சாரத்தில் நின்று வேலைசெய்துகொண்டிருந்தோம். மணிகண்டனும், மைதீனும் கட்டிடத்தின் மேலே கிழக்கு பக்கத்தில் நின்று அய்யப்பனுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். மணிகண்டன் பேசிக்கொண்டே கீழே குனிந்தார் திடீரென வலிப்பு ஏற்பட்டு கட்டிடத்திலிருந்து கீழே விழுந்துவிட்டார். கட்டிடத்தின் உயரம் 30 அடி இருக்கும். நாங்கள் சாரத்திலிருந்து கீழே இறங்கி போய் பார்த்தபோது பின்னதலையில் ரத்தம் வந்துகொண்டிருந்தது. பின்பு ஆம்புலன்ஸ் மூலம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நானும் வால்பாறை அரசு மருத்துவமனை போனேன். அவரை மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அவர் மறுநாள் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

மணிகண்டனும் மொய்தீனும் இருவரும் ஒன்றாக வந்தார்களா என்றால் ஆமாம். நாங்கள் 29-ம் தேதியே வால்பாறை வந்துவிட்டோம் என்றால் சரிதான். 30-ம் தேதி காலை 07.00 மணியிலிருந்து நாங்கள் வேலை செய்தோம் என்றால் சரிதான். மணிகண்டனும் மொய்தீனும் இருவரும் மதியம் 12.00 மணிக்கு வந்தார்கள் என்றால் சரிதான். மணிகண்டன் வெளியில் நின்று பேசிக்கொண்டிருந்ததால் வலிப்பு ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டார் என்றால் கீழே குனிந்தார் வலிப்பு வந்தது கீழே விழுந்துவிட்டார். நாங்கள் வேலை செய்துகொண்டிருந்தபோது பாதுகாப்பு உபகரணங்கள் மஞ்சள் நிற ஹெல்மெட், மஞ்சள் நிற கயிறு போன்றவை கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :

போலீசார் விசாரணையில் எங்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. போலீசார் விசாரிக்கும் போது ஹெல்மெட், கயிறு ஆகியவற்றை எடுத்து காட்டினேன். மணிகண்டனுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் கொடுக்கவில்லை என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மணிகண்டன் அன்றைய தினம் வேலைக்கு வரவில்லை. வேலைக்கு வந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.